ISSN: 2582-5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ ஜூலை. 27, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 293 ❖ ரூ.10

### பாஜக ஆட்சி தொடர்ந்தால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை யாராலும் காப்பாற்ற முடியாது

# எச்சரிக்கை

## புதிய நாடாளுமன்றம் கட்டியிருக்கிறார்களே எதற்கு? 888 இருக்கைகளைப் போட்டிருக்கிறார்கள். அது எதற்காக? நாடாளுமன்றத்தில் தங்களது விருப்பங்களுக்கு ஏற்ப இருக்கைகளைப் போட நினைக்கிறார்கள் ; முதல்வர் மு.க.ஸ்டாலின்



**திருச்சி, ஜூலை. 27–**

**"பாஜக ஆட்சி தொடருமானால் இந்தியாவில் மக்களாட்சியை, சமூகநீதியை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை யாராலும் காப்பாற்ற முடியாது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

திருச்சியில் டெல்டா மாவட்ட திமுக வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் பங்கேற்று பேசியது: "பாஜக ஆட்சி தொடருமானால் இந்தியாவில் மக்களாட்சியை, சமூகநீதியை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை யாராலும் காப்பாற்ற முடியாது.மீண்டும் பாஜக ஆட்சி அமைக்குமானால், இந்தியாவில், ஜனநாயகமே இருக்காது. ஏன், தமிழ்நாடு என்ற மாநிலமோ, அதற்கான சட்டமன்றமோ, முதல்வரோ, அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ இருக்க மாட்டார்கள். அத்தனையையும் காலி செய்து விடுவார்கள். உள்ளாட்சி அமைப்புகள் இருக்காது. இதுதான் அனைத்து மாநிலங்களுக்கும் நடக்கும்.

புதிய நாடாளுமன்றம் கட்டியிருக்கிறார்களே எதற்கு? 888 இருக்கைகளைப் போட்டிருக்கிறார்கள். அது எதற்காக? நாடாளுமன்றத்தில் தங்களது விருப்பங்களுக்கு ஏற்ப இருக்கைகளைப் போட நினைக்கிறார்கள். மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்ற பேரால் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கப் பார்க்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முறையாகப் பின்பற்றிய தமிழகம், கேரளா போன்ற மாநிலங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படும். வட மாநிலங்களில் இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் ஆகும்.

நாம் 40 தொகுதிகளில் வெற்றி பெற்றுப் போனாலும், வட மாநில எம்பிக்களை வைத்து ஆட்சியைப் பிடித்துக் கொள்ளலாம் என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள். தமிழகத்தின் குரலை இதன் மூலமாகத் தடுக்கப் பார்க்கிறார்கள். எனவேதான் இந்தத் தேர்தலை மிக மிக முக்கியமான தேர்தலாக நான் சொல்கிறேன். மாநிலங்களுக்கு, பல்வேறு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு, பல்வேறு மொழிகளைப்பேசுபவர்களுக்கு, பல்வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கு எதிரான சிந்தனை கொண்ட ஒரு கட்சிதான், பாஜக. ஒற்றைக் கட்சியே இருக்க வேண்டும் என்று நினைக்கும் கட்சி அது.

ஒற்றைக் கட்சி ஆட்சி அமைந்தால், ஒரே ஒரு ஆள் கையில் அதிகாரம் போய்விடும். இன்னும் சொல்கிறேன், அவ்வாறு அமைந்தால் அது பாஜகவினருக்கே ஆபத்தான கொள்கை. அதனால்தான் பாஜக இந்தத் தேர்தலில் வீழ்த்தப்பட வேண்டும் என்று சொல்கிறோம்.இந்த முக்கியமான இலக்கை முன்னெடுக்கும் கட்சிகள் அனைவரும் இன்றைக்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம். 26 கட்சிகள் அடங்கிய இந்தக் கூட்டணிக்கு - Indian National Developmental Inclusive Alliance - என்று பெயர் சூட்டி இருக்கிறோம். INDIA - என்பது இந்தக் கூட்டணிக்குப் பெயர். எனவே இந்தியாவைக் காப்பாற்றப் போவது இந்த INDIA கூட்டணிதான். இதனை பிரதமராக இருக்கும் மோடி அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

பாஜகவை எதிர்க்க ஒரு வலுவான அணியை அமைத்துவிட்டார்களே என்று நினைத்து இப்போது ஏதேதோ பேசிக் கொண்டு இருக்கிறார். இந்த நோக்கத்தைப் பற்றி இப்போது அல்ல, நான் ஓராண்டு காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதனால் என் மீதும் அவர்களுக்குக் கோபம். அதனால்தான் மத்தியப் பிரதேசத்துக்குப் போனாலும் திமுகவைத் திட்டுகிறார். அந்தமான் விமான நிலையத்தைத் திறந்து வைக்கப் போனாலும் திமுகவைத் திட்டுகிறார்.என்ன சொல்கிறார், வாரிசுகளுக்கான கட்சியாம். இதைக் கேட்டுக் கேட்டு புளிச்சுப் போச்சு. வேறு ஏதாவது யோசித்து கண்டுபிடித்துச் சொல்லுங்கள்.நான் இன்னும் சொல்கிறேன், இது வாரிசுகளுக்கான கட்சிதான். ஆமாம், வாரிசுகளுக்கான கட்சிதான். ஆரியத்தை வீழ்த்த வந்த திராவிடத்தின் வாரிசுகள் நாங்கள்.பெரியாரின் வாரிசுகள், அண்ணாவின் வாரிசுகள், கருணாநிதியின் வாரிசுகள் நாங்கள், இதனைத் தைரியமாக, பெருமையோடு என்னால் சொல்ல முடியும்.

பாஜக யாருடைய வாரிசு? நான் கேட்கிறேன். கோட்சேவின் வாரிசுகள்தான் நீங்கள் என்று உங்களால் தைரியமாகச் சொல்ல முடியுமா? சொல்வதற்கான தைரியம் உங்களுக்கு உண்டா? குஜராத் மாநிலத்தில் 2002-ம் ஆண்டு என்ன நடந்தது என்பதை இந்த நாடு மறக்கவில்லை. அன்று குஜராத்தில் நடந்ததை இன்று மணிப்பூர் நினைவூட்டிக் கொண்டு இருக்கிறது.

மே மாதம் தொடங்கிய வன்முறையை இன்றுவரை அந்த மாநிலத்தை ஆளும் மணிப்பூர் பாஜக அரசாலும் தடுக்க முடியவில்லை.

இங்கே ஒரு கொத்தடிமைக் கூட்டம், யார் என்று தெரியும், அதிமுக என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் யாராவது மணிப்பூரைப் பற்றிப் பேசினார்களா? வாய்க்கு வந்ததைப் பேசுவாரே பழனிசாமி. அவர் பேசினாரா? பேசவில்லையே. 'பாஜகவுக்கு நான் அடிமையில்லை' என்று சொல்லும் பழனிசாமி, மணிப்பூர் கொடூரத்துக்குக் காரணமான அந்த மாநில முதல்வரையோ ஒன்றிய பாஜக அமைச்சரையோ கண்டித்தாரா?

பழனிசாமியை பக்கத்தில் வைத்துக் கொண்டு ஊழல் ஒழிப்பு பற்றி பிரதமர் மோடி பேசுகிறார். நான் அப்போதே கேட்டேன், "பக்கத்தில் யாரை வைத்துக் கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள்?" என்று கேட்டேன். சிபிஐ விசாரணைக்கு உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு, அதற்குத் தடை கேட்டு உச்ச நீதிமன்றம் போனவர் பழனிசாமி. அவருடன் அமைச்சராக இருந்தவர்கள் மீதும் ஊழல் கறை படிந்திருக்கிறது. இந்த ஊழல் பேர்வழிகளை பக்கத்தில் வைத்துக் கொண்டு ஊழலைப் பற்றி பிரதமர் பேசுகிறார். பேசலாமா?

நான் இன்னும் கேட்கிறேன். கர்நாடக மாநிலத்தில் ஊழல் பாஜக அரசை, ஊழலுக்காகத்தானே அந்த மாநில மக்கள் விரட்டி அடித்தார்கள், தோற்கடித்தார்கள். அது மறந்து போய்விட்டதா? அதிமுகவினர் மீதான ஊழல் வழக்குகளைக் காட்டி அவர்களை அடிபணிய வைத்துள்ளது பாஜக கடந்த காலத்தில் தமிழகத்தின் அனைத்து உரிமைகளையும் பாஜகவுக்கு பயந்து அடமானம் வைத்தது அதிமுக. என்று பேசினார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், ஆண்டு பொதுத்தேர்வு (2022–2023) பகுப்பாய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கருணாகரன், மாவட்ட கல்வி அலுவலர்கள் ரமேஷ் (புதுக்கோட்டை), முருகேசன் (அறந்தாங்கி), ஜெயராஜ் (தனியார் பள்ளிகள்) மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஸ்ரீ வீரமாகாளியம்மன் திருக்கோயில் ஆடிப்பெருந்திருவிழா முதல் நாள் தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர்

## மணிப்பூர் விவகாரம் கருப்பு உடையில் இன்று நாடாளுமன்றம் வர எதிர்க்கட்சி எம்பிக்கள் முடிவு

**புதுடெல்லி, ஜூலை. 27–**

மணிப்பூர் விவகாரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வலியுறுத்தும் விதமாக இன்று கருப்பு உடை அணிந்து நாடாளுமன்றம் வர எதிர்க்கட்சி எம்பிக்கள் முடிவு செய்துள்ளனர்.



மணிப்பூரில் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைகள் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் அறிக்கை அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. தங்கள் கோரிக்கையை வலியுறுத்தும் விதமாக எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வர எதிர்க்கட்சிகள் சார்பில் சபாநாயகரிடம் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தி அதன் பின்னர், இந்த விவகாரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தங்கள் எதிர்ப்பை பதிவு செய்யும் விதமாக இன்று கருப்பு உடை அணிந்து நாடாளுமன்றம் வர எதிர்க்கட்சி எம்பிக்கள் முடிவு செய்துள்ளனர். முன்னதாக, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆலோசனையில் ஈடுபட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. "நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வருவது என்பது காங்கிரஸ் கட்சியின் முடிவு மட்டுமல்ல.'இண்டியா' கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் முடிவு" என காங்கிரஸ் எம்பி மணிஷ் திவாரி தெரிவித்தார்.

இந்த தீர்மானம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படுமானால் அது வெற்றி பெறுமா என்ற கேள்விக்கு பதில் அளித்த காங்கிரஸ் எம்பி கவுரவ் கோகாய், "மக்களவையில் 'இந்தியா' கூட்டணியின் எண்ணிக்கை பலம் என்ன என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், இது வெறும் எண்ணிக்கை பற்றியது மட்டுமல்ல. இது நீதிக்கான மணிப்பூரின் போராட்டம் பற்றியது. மணிப்பூரை பிரதமர் மோடி மறந்து போகலாம்; ஆனால், 'இண்டியா' கூட்டணி ஒருபோதும் மறக்காது; நாங்கள் அவர்கள் பக்கம் நிற்போம் என்ற செய்தியை மணிப்பூரில் வாழும் ஒவ்வொரு சகோதர சகோதரிக்கும் தெரிவிப்பதற்கான முயற்சி இது. பிரதமர் மோடி நாடாளுமன்றத்துக்கு வந்து இது குறித்து பேச வேண்டும். இதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம். நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு பற்றியது இது. எனவே, நாடாளுமன்றத்துக்கு வந்து பிரதமர் மோடி கண்டிப்பாக பேச வேண்டும்" என வலியுறுத்தினார்.

இதனிடையே, மணிப்பூர் விவகாரம் தொடர்பாக விதி எண் 176ன் கீழ் குறுகிய நேர விவாதத்தை நடத்த வலியுறுத்தி மாநிலங்களவை தலைவர் ஜக்தீப் தன்கரிடம் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர்கள் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைந்து மனு அளித்தனர்.

## 'நியோ– மேக்ஸ்' நிறுவன மோசடி மதுரையில் எல்ஐசி முன்னாள் அலுவலர் கைது

**மதுரை , ஜூலை. 27–**

'நியோ மேக்ஸ்' ரியல் எஸ்டேட் மோசடியில் மேலும், எல்ஐசி முன்னாள் அலுவலர் கைது செய்யப்பட்டார்.

'நியோ-மேக்ஸ்' என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்துக்கு சொந்தமான 12-க்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களும் மதுரை உட்பட பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டன. இந்த நிறுவனங்கள் கூடுதல் வட்டி மற்றும் குறிப்பிட்ட ஆண்டில் முதலீடு தொகை இரடிப்பு செய்து வழங்கப்படும் என, ஆசைவார்த்தை கூறினர். இதை நம்பிய வாடிக்கையாளர்களிடம் பல கோடி பணம் வசூலித்து ஏமாற்றியதாக புகார்கள் எழுந்தன.



கோவில்பட்டியைச் சேர்ந்த ஒருவர் கொடுத்த புகாரின்பேரில், 'நியோ மேக்ஸ்' மற்றும் துணை நிறுவனங்களின் இயக்குநர்கள் மதுரை கமலக் கண்ணன் (55), பாலசுப்பிரமணியன் (54),திருச்சி வீரசக்தி (49) மற்றும் முகவர்கள் மீதும் வழக்கு பதியப்பட்டது. 'நியோ -மேக்ஸ்' நிறுவனத்திற்கு சொந்தமான மதுரை உட்பட பல்வேறு மாவட்டத் திலுள்ள நிறுவனங்களில் போலீஸார் சோதனை நடத்தினர். இதன்மூலம் சொத்துக்கள் தொடர்பாக சில ஆவணங்களையும் கைப்பற்றியதாக கூறப்படுகிறது. மதுரையில் இதுவரை 100க்கும் மேற்பட்டோர் புகார்களும் குவிந்துள்ளன.

இவ்வழக்கில் நெல்லை நிறுவனம் இயக்குநர்கள் சைமன் ராஜா, மதுரை அச்சம்பத்து கபில், தூத்துக்குடி இசக்கிமுத்து, சகாயராஜ் ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை தொடர்ந்து, மதுரை பைபாஸ் ரோட்டைச் சேர்ந்த பத்மநாதன் (55) என்பவரும் நேற்று கைது செய்யப்பட்டார். இவர், ஏற்கனவே எல்ஐசியில் பணிபுரிந்து, தானாக முன்வந்து விருப்ப ஓய்வு பெற்றவர். ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் இணைந்து முகவர்கள் வாடிக்கை யாளர்களை எப்படி கவருவது குறித்து பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளார். இவருக்கும், மோசடியில் தொடர்பு இருக்கும் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார் என, பொருளாதார குற்றத்தடுப்பு போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், இவ்வழக்கின் தலைமறைவாக உள்ள முக்கிய புள்ளிகள் கமலக்கண்ணன், பாலசுப்பிரமணியன், வீரசக்தி ஆகியோரை தொடர்ந்துதேடுகின்றனர்.

# இன்று

# 27-7-23




சக வருடம் 1945 சிராவணம் 05

| சோபகிருது ஆடி 11 | JUL - THU வியாழன் | முஹர்ரம் 8 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | வளர்பிறை 208 / 157 | |

வளர். நவமி 13.00 (கா. 11.14) விசாகம் 39.26 (மா. 09.48) தியாஜ் 49.19 அகஸ் 31.12 சித்த. மதுரை மீனாட்சி தங்கக் குதிரை வாகன பவனி. வாஸ்து நாள். காலை 07.44 - 08.20 வரை வாஸ்து செய்ய நன்று. ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் புறப்பாடு.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.45-11.45 | 12.15-1.15 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ---- | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; கடக லக்னம் இருப்பு நா. 3 வி. 47; சந்திராஷ்டமம் அசுபதி பரணி; கரணம் : 3-4.30; சூரிய உதயம் : 6.02

நிழலின் அருமை வெயிலில் தெரியும்

இராசிபலன்: மேஷம் - லாபம்; ரிஷபம் - சுகம்; மிதுனம் - நட்பு; கடகம் - கவனம்; சிம்மம் - வெற்றி; கன்னி - போட்டி; துலாம் - வரவு; விருச்சி - மறதி; தனுசு - தெளிவு; மகரம் - சிக்கல்; கும்பம் - நலம்; மீனம் - ஆர்வம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

அன்பை உணர மட்டுமே முடியும்.
ஒருபோதும் பார்க்க முடியாது.
அதேபோல் தான் எதையும்
நிரூபிக்க முயற்சி
செய்யாதீர்கள்!




# அரியலூர் அரசு பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் விழா



அரியலூர், ஜூலை.27-

விக்கிரமங்கலம், த.பொட்டக்கொல்லை அரசு மேல்நிலைப் பள்ளிகளில், மாணவ, மாணவிகளுக்கு, இலவச சைக்கிள் வழங்கும் விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, விக்கிரமங்கலம் மற்றும் த.பொட்டக்கொல்லை அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நடைபெற்ற, பிளஸ் டு மாணவ, மாணவிகளுக்கு, இலவச சைக்கிள் வழங்கும் விழாவுக்கு, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா தலைமை வகித்தார்.

விக்கிரமங்கலம், ஸ்ரீ புரந்தான், ஜமீன் சுத்தமல்லி, த.பொட்டக்கொல்லை, த.கீழவெளி அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் நடுவலூர் பாரத மாதா ஆர்சி மேல்நிலைப்பள்ளியில் கல்வி பயிலும் 278 மாணவ மாணவிகள் உட்பட, மொத்தம் 732 மாணவ, மாணவிகளுக்கு, தமிழக அரசின் இலவச சைக்கிள்களை, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா வழங்கி பேசினார்.

இவ்விழாக்களில், நடுவலூர் பாரதமாதா ஆர்.சி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ராபர்ட், தமிழ் ஆசிரியர் அன்புகாந்தி, அரசுமேல்நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் த.பொட்டக்கொல்லை கருணாநிதி, த.கீழவெளி கிருஷ்ணசாமி, விக்கிரமங்கலம் (பொறுப்பு) வீராசாமி, ஜமீன் சுத்தமல்லி தலைமை ஆசிரியர் (பொறுப்பு) பன்னீர் செல்வம், ஒன்றிய கவுன்சிலர் எழிலரசன், த.பொட்டக்கொல்லை ஊராட்சி மன்றத் தலைவர் ஐஸ்வர்யா தேவி மைனர் பாண்டியன், துணைத் தலைவர் வளவெட்டி குப்பம் ராஜா, அம்பாபூர் ஊராட்சி மன்றத் தலைவர் கலியபெருமாள், மதிமுக மாவட்ட செயலாளர் ராமநாதன், ஒன்றிய செயலாளர்கள் சங்கர், பன்னீர்செல்வம் விக்கிரமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் கவிதா, துணைதலைவர் சங்கர், முன்னாள் தலைமை ஆசிரியர் அறிவழகன், மற்றும் பல்வேறு பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர் முடிவில் த.கீழவெளி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஈ.கிருஷ்ணசாமி நன்றி கூறினார்.

### என்எல்சி விரிவாக்கப் பணி விளைநிலங்களில்

# பயிர்கள் அழிப்பு சேத்தியாத்தோப்பு அருகே 500ம் மேற்பட்ட போலீஸார் குவிப்பு–சீமான் கண்டனம்



கடலூர் , ஜூலை.27-

சேத்தியாத்தோப்பு அருகே வளையமாதேவி கிராமத்தில் என்எல்சி இந்தியா நிறுவனம் கையகப்படுத்திய நிலத்தில் பரவனாறு விரிவாக்கம் வாய்க்கால் வெட்டும் பணி, விளைநிலங்களில் உள்ள நெல் பயிரை அழித்து தீவிரமாக நடந்து வந்து வருகிறது. அப்பகுதியில் பாதுகாப்புக்கு 500-க்கும் மேற்பட்ட போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம் நெய்வேலி என்எல்சி இரண்டாவது சுரங்க விரிவாக்க பணிக்காக கத்தாழை ,கரிவெட்டி மேல் வளையமாதேவி, கீழ் வளையமாதேவி, ஆதனூர் உள்ளிட்ட கிராமங்களை என்எல்சி நிர்வாகம் விவசாயிகளின் நிலங்களை கையகப்படுத்தி இழப்பீடு வழங்கியுள்ளது. இதில் இழப்பீடு முழுமையாக வழங்கவில்லை எனவும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாங்க வேண்டும், மாற்று குடியிருப்பு மற்றும் கடந்த காலங்களில் (2006 முதல் 2013 வரை நிலத்தை கையகப்படுத்தியதற்கு) ரூ.6 லட்சம் வழங்கியவர்களுக்கு கூடுதல் இழப்பீடு வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையின் காரணமாக பல்வேறு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது. இதில், ஒரு சில பொதுமககள், விவசாயிகள் மறுத்து வந்தனர். இதனால், அரசியல் கட்சி தலைவர்கள் அவ்வப்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சில மாதங்களாக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

இதன் தொடர்ச்சியாக செவ்வாய்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகம், என்எல்சி நிர்வாகம், விவசாயிகள் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் உடன்பாடு ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை வளையமாதேவி பகுதியில் பரவனாறு விரிவாக்கம் வாய்க்கால் வெட்டும் பணிக்காக என்எல்சி இந்தியா நிறுவனம் 30-க்கும் மேற்பட்ட ராட்சத மண் வெட்டும் இயந்திரங்கள் கொண்டு வந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்துக்கு வாய்க்கால் அணை போடும் பணி நடைபெற்றது. இதில் விளைநிலங்களில் நெல் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர் அழிக்கப்பட்டு, அதில் அணைகள் போடப்பட்டன.

விழுப்புரம் சரக டிஐஜி. ஜியாவுல் ஹக், கடலூர் எஸ்.பி ராஜாராமன் ஆகியோர் தலைமையில் சுமார் 500-க்கும் மேற்பட்ட போலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர். மேலும், தண்ணீர் பீச்சி அடிக்கும் இயந்திரம், தீயணைப்பு வாகனம், 108 ஆம்புலன்ஸ் உள்ளிட்ட பாதுகாப்புடன் வாய்க்கால் வெட்டும் பணி நடைபெற்றது.

இது குறித்து தகவல் அறிந்து பாமகவினர் 50-க்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு சேத்தியாதோப்பு குறுக்கு ரோட்டில் சாலை மறியல் செய்ய முயன்றபோது போலீஸார் அவர்களை கைது செய்து சேத்தியாதோப்பு தனியார் மண்டபத்தில் வைத்துள்ளனர். அந்தப் பகுதி முழுவதும் பரபரப்பாக காணப்படுகிறது.

" நெய்வேலி நிறுவனத்தில் பறிபோகும் தமிழர்களின் உரிமையைப் பெற்றுக்கொடுக்க எவ்வித முயற்சியும் எடுக்காத திமுக அரசு, தமிழர் நிலங்களை மட்டும் பறித்துக்கொடுக்க முனைப்புக் காட்டுவது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற பச்சைத் துரோகமாகும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.




# அமரடக்கி புன்னகை அறக்கட்டளை நடத்தும் ஆறாம் ஆண்டு பனைவிதை நடும் திருவிழா



ஆவுடையார்கோவில், , ஜூலை.27-

புதுக்கோட்டை மாவட்டம் அமரடக்கி, ஆவுடையார்கோவில் ஒன்றியம் வேள்வரை ஊராட்சி வேள்வரை ஏரி கரையில் 1036 பனைவிதைகள் நடவு செய்யப்பட்டது

புன்னகை அறக்கட்டளை தமிழ் மரம் நட்டல் திட்டத்தின் கீழ் புதுக் கோட்டை மாவட்டம் அனைத்து ஊராட்சிகள் தோறும் 1 கோடி பனை விதை நடும் நெடும்பணியில் தொடர்ந்து செய்து வருகிறார்கள், இந்த நிகழ்வை ஒன்றிய குழு உறுப்பினர் சுந்திரபாண்டியன், வேள்வரை ஊராட்சி மன்றத்தலைவர் த.ஜெயம் தங்கமணி தொடங்கி வைத்தார்

புன்னகை அறக்கட்டளை ஆ.சே. கலைபிரபு , ரமேஷ் தங்கமணி முன்னிலையில் நடைபெற்றது இதில் , புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் சிரஞ்சிவி, திட்ட ஒருங்கிணைப்பாளர், அஜீத்குமார், அரிமளம் ஒன்றியத் தலைவர் காடங்குடி சக்திவேல், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் அழகு கூத்தையா, ஆவுடையார்கோவில் ஒன்றியத் தலைவர் பாக்கியராஜ், ,கரந்தமலை, ராஜேந்திரன், கருப்பையா, கண்ணன், விஜயா, காளியம்மாள் பொதுமக்கள் கலந்து கொண்டு ஏரிகரை முழுவதும் நடவு செய்தனர்.

# ஆவுடையார்கோவில் அருகே மீமிசலில் ஸ்ரீ கல்யாண ராமசாமி திருக்கோவில் தேரோட்டம்



ஆவுடையார்கோவில், ஜூலை.27-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகாவிற்கு உட்பட்ட மீமிசல் ஸ்ரீ கல்யாண ராமசாமி திருக்கோவில் தேரோட்டம் கடந்த 18.7.2023 அன்று கொடியேற்றத்துடன் தினசரி திருவிழா நடைபெற்றது அதை அடுத்து நேற்று எட்டாம் நாள் திருவிழாவானா திருத்தேரோட்டம் நடைபெற்றது.

இந்ததிருத்தேர்ஸ்ரீகல்யாண ராமசாமி கோவிலின் எதிர் புறத்திலிருந்து திருத்தேரில் வடம் அமைக்கப்பட்டு,இந்த திருத்தேர் புதுக்கோட்டை உதவி ஆணையர் அனிதா மற்றும் சந்திரசேகரன் செயல் அலுவலர் அருணா தேவி, சத்யராஜ் ஆகியோர் தலைமையிலும் ஆலத்தூர் அம்பலம் மீமிசல் குடியிருப்பு அம்பலம் மற்றும் கிராமத்தார்கள் ஆகியோர் முன்னிலையிலும் பொதுமக்கள் வடம் பிடித்து இழுத்தனர். இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர் மற்றும் இத்திருத்தேர் கோவிலின் முன்பாக இருந்து புறப்பட்டு நான்கு வீதிகளையும் சுற்றி இத்திருத்தேரில் ஸ்ரீ கல்யாண ராமர் ஸ்ரீ லட்சுமணர், ஸ்ரீ சீதை அம்மாள் ஆகியோர் வலம் வரும்போது பக்தர்கள் அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர், இந்த திருத் தேரோட்டத்திற்கு மீமிசல் காவல் துறையினர் பாதுகாப்பு பணியை மேற்கொண்டனர்.



தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி பொறுப்புகளுக்கு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர், இதில் மாவட்ட அமைப்பாளராக உதயகுமார், துணை அமைப்பாளர்களாக சதிஷ்குமார், வீரமணிகண்டன், தினேஷ், முத்துலட்சுமி, மணிகண்டன், ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்ட மாணவர் அணி நிர்வாகிகள் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏவை சந்தித்து வாழ்த்து பெற்றனர், அருகில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலா சங்கர பாண்டியன், மாவட்ட பொருளாளர் சரவணன், மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெரியதுரை, நகரச் செயலாளர் பிரகாஷ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# ஆலங்குடி ஆனந்தம் லயன்ஸ் சங்க புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா



ஆலங்குடி, ஜீலை.27-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி ஆனந்தம் லயன்ஸ் சங்க புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா நடைபெற்றது. ஆனந்தம் லயன்ஸ் சங்கத் தலைவர் சீனிவாசன் வரவேற்புரையாற்றினார், நிகழ்ச்சியில் 2023-2024 சங்கத் தலைவராக குமார், செயலாளராக கே.கே.குமார், பொருளாளராக அன்பழகன் ஆகியோரை மாவட்டத் துணை ஆளுநர் சவரிராஜ் பணியில் அமர்த்தி சிறப்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் சந்திரகாந்த் புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து வாழ்த்துரை வழங்கினார்.

சௌடாம்பிகா நிறுவனத் தலைவர் ராமமூர்த்தி சேவை திட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார், நிகழ்ச்சியில் காவல்துறையில் பணியாற்றும் முருகேசன், திருமலை, பத்திரிக்கை துறையை சேர்ந்த சரவணன் ஆகியோருக்கு சிறந்த சேவைக்கான விருது வழங்கப்பட்டது. தலைவராக பதவி ஏற்று கொண்ட குமார் ஏற்புரையாற்றினார், செயலாளர் கே.கே.குமார் நன்றியுரையாற்றினார், நிகழ்ச்சியில் ஆனந்தம் லயன்ஸ் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# மணிப்பூர் சம்பவத்தைக் கண்டித்து மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம்



புதுக்கோட்டை, ஜூலை.27-

மணிப்பூர் மாநிலத்தில் தொடரும் இனவெறித் தாக்குதலைக் கண்டித்தும், பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்தும் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அரசு கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்திற்கு இந்திய மாணவர் சங்கத்தின் கல்லூரி கிளைச் செயலாளர் ஏ.மதன்குமார் தலைமை வகித்தார், கோரிக்கைகளை விளக்கி மாணவர் சங்க மாவட்ட துணைச் செயலாளர் எஸ். பிரியங்கா மாவட்டக்குழு உறுப்பினர் ஏ.அன்பரசன், பிரபு ஆகியோர் பேசினர், போராட்டத்தில் ஏராளமான மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்

# அமித் ஷா கடிதமும், மோடியின் அணுகுமுறையும் முரண்களை முன்வைத்து கார்கே பதில் கடிதம்



புதுடெல்லி , ஜூலை.27-

“ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் நீண்ட காலமாக இடைவெளியிருப்பது தெரியும். இந்த இடைவெளி இப்போது ஆளும் கட்சிக்குள்ளும் ஏற்பட்டுள்ளது” என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கடிதத்துக்கு எழுதிய பதிலில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மணிப்பூர் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும். பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிக்கை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து முழக்கங்கள் எழுப்பி வருகின்றன. இதனால் மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கிய முதல் நான்கு நாட்கள் அலுவல்கள் நடைபெறாமல் முடங்கியன. இந்த நிலையில், நாடாளுமன்ற கூட்டத் தொடரினை அமைதியாக நடத்த ஒத்துழைக்குமாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு செவ்வாய்க்கிழமை கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்துக்கு காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே நேற்று பதில் கடிதம் எழுதியுள்ளார். அதனைத் தனது ட்விட்டர் எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், "ஒரு நாளில் எதிர்க்கட்சிகளை ஆங்கிலேய ஆட்சியாளர்களுடனும், தீவிரவாத குழுக்களுடனும் பிரதமர் ஒப்பிட்டு பேசுகிறார். அதே நாளில், மத்திய உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளிடமிருந்து சாதகமான நடவடிக்கைகளை எதிர்பார்ப்பதாக உருக்கமாக கடிதம் எழுதுகிறார். நீண்ட காலமாக ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் இடைவெளி இருப்பது தெரியும். இப்போது ஆளுங்கட்சிக்குள்ளேயே இடைவெளி ஏற்பட்டிருப்பது வெளிப்படத் தொடங்கியிருக்கிறது.

எதிர்க்கட்சிகளை திக்கற்றவர்கள் என்று பிரதமர் கூறியிருப்பது அபத்தமானது மட்டும் இல்லை, துரதிர்ஷ்டவசமானதும் கூட. பிரதமர் அவைக்கு வந்து மணிப்பூர் குறித்து அறிக்கை அளிக்க வேண்டும் என நாங்கள் கேட்கிறேம். அப்படிச் செய்வது அவரின் மரியாதையை புண்படுத்தும் என்று பிரதமர் கருதுகிறார். நாட்டு மக்களிடம் எங்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வு உள்ளது. அதற்காக என்ன விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், அமித் ஷாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கார்கே கூறியிருப்பதாவது: "நாடாளுமன்றத்தில் அரசின் அணுகுமுறை உங்களின் கடிதத்துக்கு மாறாக தன்னிசையான உணர்வுடன் இருக்கிறது. இது ஒன்று புதியது இல்லை. எதிர்க்கட்சிகள் இதுபோன்ற அணுகுமுறையை பல கூட்டத் தொடர்களில் பார்த்திருக்கின்றன.

கூட்டத்தொடர் முழுவதும் உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுமலைக்கும்மடுவுக்குமான வித்தியாசத்தை உருவாக்குகிறது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவாதம் நடத்த வேண்டும் என்று தினந்தோறும் நோட்டீஸ் அளிக்கின்றனர். ஆனால், அரசு அதை நிராகரிக்கிறது. அவைத் தலைவரின் அனுமதிக்கு பின்னர் உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் பேச எழும்போது, சபையின் தலைவர் அவரைத் தடுக்கிறார். ஆனாலும், அவையில் விவாதம் நடக்கும் என்ற நம்பிக்கையில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கூடுகின்றனர். அனைத்தையும் கடிதத்தில் வெளிப்படுத்துவது எளிது. சொல்வதைப் போல செயல்பட்டு எளிதாக எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையையும் பெறலாம்.

நீண்ட காலமாக நாம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் வரலாற்றில் இடம்பெறும் என்று நாம் அறிவோம். வருங்கால சந்ததிகளுக்கு நாம் பொறுப்பானவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் உரிமைக்காக நாம் போராடினோம் என்று அவர்களிடம் கூற முடியும். நாடாளுமன்றம் அமைதியான முறையில் நடக்கவேண்டும் என்று ஆளும் தரப்பு விரும்பினால், அதற்கான எளிய வழி அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேச அனுமதிப்பதே" என்று மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

முன்னதாக அமித் ஷா தனது கடிதத்தில், "மணிப்பூர் விவகாரத்தில் அரசிடமிருந்து ஓர் அறிக்கையை எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்கின்றன. வெறும் அறிக்கை மட்டும் இல்லை, ஒரு முழுமையான விவாதத்துக்கு அரசு தயாராக இருக்கிறது என்று நான் உங்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதற்கு அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பும் வேண்டும். நல்ல ஒரு சூழலில் விவாதம் நடத்த முன்வரவேண்டும் என்று உங்கள் மூலம் நான் அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்" என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே, மத்திய அரசு மீது காங்கிரஸ், பிஆர்எஸ் கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர நோட்டீஸ் அளித்த நிலையில், அதனை விவாதத்துக்கு ஏற்றுக் கொண்டதாக மக்களவை சபாநாயகர் உறுதி செய்துள்ளார். இதுதொடர்பாக அவர், "நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்துக்கு ஏற்கப்பட்டது. அனைத்துக் கட்சிகளுடனும் ஆலோசித்து விவாதத்துக்கான நேரம் குறிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் கலவரத்துக்கு காரணமான ஒன்றிய அரசை கண்டித்து

# சீர்காழியில் மக்கள் அதிகாரம் அமைப்பினர் உள்ளிட்ட கட்சியினர், கண்டன ஆர்ப்பாட்டம்



சீர்காழி. ஜூலை,27

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் மக்கள் அதிகார அமைப்புகள் ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது எழுப்பப்பட்ட கோரிக்கைகள். மணிப்பூர் பழங்குடியின மக்கள் மீது தொடரும் வன்முறை வெறியாட்டங்களை உடனே தடுத்து நிறுத்த வேண்டும், குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை பாதுகாத்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தை கட்சி, தந்தை பெரியார் திராவிட கழகம், திராவிடர் விடுதலை கழகம், ஐக்கிய முஸ்லீம் முன்னேற்ற கழகம், தமிழர் உரிமை இயக்கம், மக்கள் தமிழக கட்சி, தமிழக மக்கள் முன்னணியினர், வழக்கறிஞர் சங்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், விவசாயிகள் விடுதலை முன்னணி, தமிழக வாழ்வுரிமை கட்சி உள்ளிட்ட அனைத்து கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சீர்காழி நகராட்சி பகுதிகளில் இரவில் மின்விளக்குகள் எரியாததால் தீப்பந்தம் ஏற்றி வைத்து நகர மக்கள்



சீர்காழி,ஜூலை,27

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சி 10வது வார்டுக்கு உட்பட்ட திருக்கோலக்கா தெரு, திரௌபதி அம்மன் கோவில், பிடாரி அம்மன் தெரு ஆகிய பகுதிகளில் சுமார் 150 க்கு மேற்பட்ட குடும்பத்தினர்கள் வசித்து வருகின்றனர்.

இந்த பகுதியில் நகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள தெரு மின் விளக்குகள் நகராட்சி ஊழியர் மூலம் மாலை எரிய விடப்பட்டு பின்னர் அதிகாலை நிறுத்தப்படுவது வழக்கம்.

இந்நிலையில் தெரு மின்விளக்குகள் சில நாட்களாக சரிவர எரியாமல் தெரு முழுவதும் இருண்டு கிடக்கிறது.

இதனால் அப்பகுதியில் வசித்து வரும் மக்கள் அவதியடைகின்றனர் இரவு நேரங்களில் பள்ளி மற்றும் டியூஷன் சென்று விட்டு வீடு திரும்பும் மாணவ மாணவிகள், பணிகள் முடிந்து வீடு திரும்பும் பொதுமக்கள் இருண்டு கிடக்கும் சாலையில் நடந்து செல்வதற்கு அச்சம் அடைகின்றனர்.

சாலையில் விஷத்தன்மை உடைய பூச்சிகள் ,பாம்பு ஆகியன செல்வதாக இருட்டில் நடந்து செல்லும் போது அவை தீண்டும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கூறும் மக்கள் இருட்டில் வீடுகளில் விஷ பூச்சிகள் புகுந்து விடுவதாகவும் கூறினர்.

சாலையில் எதிரே வருவது தெரியாமல் இருட்டில் நடந்து செல்பவர்கள் மீது விபத்து ஏற்படுகிறது. இதனால் அச்சம் அடைந்த மக்கள் இரவு தீப்பந்தங்களை கொளுத்தி மின் கம்பத்தில் கட்டியும் மெழுகுவர்த்தியை ஏத்தி வைத்தும் சாலைகளில் செல்கின்றனர்.

இவ்வாறு தீப்பந்தம் கட்டி இரவு பொழுதை கடத்தியதாக கூறினர். நகராட்சி நிர்வாகம் தெரு மின் விளக்குகள் நாள்தோறும் சரிவர எரிவதை ஆய்வு செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விபத்து வழக்குகளில் வருமான இழப்பு தொகையில் ஓய்வூதியத்தை கழிக்கக் கூடாது: உயர் நீதிமன்றம் உத்தரவு



மதுரை, ஜூலை.27-

வாகன விபத்து இழப்பீடு வழக்குகளில் வருமான இழப்பு தொகையில் ஓய்வூதியத்தை கழிக்கக் கூடாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டையில் வேளாண் துறையில் ஓவியக் கலைஞராக பணிபுரிந்தவர் கணேசன். இவர் 2017-ல் ஓய்வு பெற்றார். அதன் பிறகு பிளக்ஸ் போர்டு தயாரிக்கும் பணி செய்து வந்தார். கடந்த 5.6.2019ல் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது திருவாப்பூர் அருகே லாரி மோதி உயிரிழந்தார். இதற்கு இழப்பீடு கோரி அவர் மனைவி எஸ். பிரமிளா, ஸ்டீபன் இன்பென் ரோசர் ஆகியோர் மோட்டார் வாகன தீர்ப்பாயத்தில் வழக்கு தொடந்தார்.

இந்த வழக்கில் ஓய்வூதியத்தை வருமான இழப்பாக எடுத்துக்கொள்ளாமல் மொத்தம் ரூ.11 லட்சத்து 28 ஆயிரத்து 217 இழப்பீடு நிர்ணயம்செய்து,விபத்தில் இறந்தவரின் கவனக் குறைவுக்காக இழப்பீடு தொகையில் 20 சதவீத குறைத்து ரூ.9 லட்சத்து 2 ஆயிரத்து 570 இழப்பீடு வழங்க புதுக்கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டது. இழப்பீடு தொகையை அதிகப்படுத்தக் கோரி பிரமிளா உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிபதி என்.சதீஷ்குமார் விசாரித்தார்.

மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் பி.கணபதி சுப்பிரமணியன் வாதிட்டார். பின்னர் நீதிபதி, "வாகன விபத்து இழப்பீடு வழக்குகளில் வருமான இழப்பீடு தொகை நிர்ணயம் செய்யும் போது இறந்த அரசு ஊழியர் பெற்று வந்த ஓய்வூதியத்தை கழிக்கக் கூடாது. எனவே இந்த வழக்கில் ஓய்வூதியத்தையும் சேர்த்த மொத்த வருமான இழப்பாக ரூ.21 லட்சத்து 72 ஆயிரத்து 948 நிர்ணயம் செய்யப்படுகிறது. இறந்தவர் ஹெல்மெட் அணியாததற்காக 10 சதவீதம் கழித்து மொத்தம் ரூ.19 லட்சத்து 55 ஆயிரத்து 653 இழப்பீடு 7.5 சதவீத வட்டியும் 4 வாரத்தில் மனுதாரருக்கு காப்பீடு நிறுவனம் வழங்க வேண்டும்" என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.



காரைக்கால் மாவட்டம் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட கரீம் நகர் பகுதியில் நிலவி வரும் மின் பற்றாக்குறையை போக்கிட ரூபாய் 16- இலட்சத்து 11-ஆயிரம் மதிப்பீட்டில் ( 200KV ) திறன் கொண்ட புதிய மின்மாற்றியினை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம், மக்கள் பயன்பாட்டிற்கு நேற்று காலை இயக்கி வைத்தார்கள் இந்நிகழ்வில் மின்துறை இளைநிலை பொறியாளர் சாதிக் மின்துறை ஊழியர்கள் மற்றும் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டார்கள்.




புதுச்சேரி அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பாக மாணவர்கள் தின பரிசளிப் விழா நேற்று மாலை காரைக்கால் கோட்டுச்சேரி அரசினர் பெண்கள் உயர் நிலைப்பள்ளியில் போக்குவரத்து துறை அமைச்சர் சத்திர பிரியங்கா தலைமையிலும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலையிலும் விழா இனிதே நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் பள்ளியின் துணை முதல்வர் ஆசிரியப் பெருமக்கள் மாணவச் செல்வங்கள் என ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். விழாவில் முதலில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

புதுக்கோட்டை புத்தகத் திருவிழா

# கல்லூரி மாணவர்களின் போட்டி முடிவு விவரங்கள் வெளியீடு

புதுக்கோட்டை, ஜூலை.27-

புதுக்கோட்டையில் வெள்ளிக்கிழமை (ஜூலை 28) தொடங்கி வரும் ஆக. 6ஆம் தேதி வரை நடைபெறவுள்ள புத்தகத் திருவிழாவையொட்டி நடத்தப்பட்ட கல்லூரி மாணவர் போட்டிகளில் வென்றோர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து 6 ஆவது புத்தகத் திருவிழாவை நகர்மன்றத்தில் வரும் ஜூலை 28 முதல் ஆக. 6ஆம் தேதி வரை நடத்தவுள்ளனர், இந்தப் புத்தகத் திருவிழாவையொட்டி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு, கவிதை மற்றும் குறும்படப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டன. இதில் பேச்சுப் போட்டிக்கான முடிவு அப்போதே வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கவிதை மற்றும் குறும்படப் போட்டிக்கான முடிவுகளை கல்லூரி மாணவர் போட்டிகளின் ஒருங்கிணைப்பாளரும், வாசகர் பேரவையின் செயலருமான பேரா. சா. விஸ்வநாதன் வெளியிட்டுள்ளார். குறும்படப் போட்டியில் மொத்தம் 11 குறும்படங்கள் பங்கேற்றன. இதில், முதல் பரிசை ஜெஜெ கல்லூரி மாணவர் எம். சுந்தர மணிகண்டன், இரண்டாம் பரிசை ஜெஜெ கல்லூரியின் மாணவி மெ. சுபா, மூன்றாம் பரிசை ஜெஜெ செவிலியர் கல்லூரி மாணவி அபிராமி ஆகியோரும் பெற்றனர். கவிதைப் போட்டியில் மொத்தம் 46 பேர் பங்கேற்றனர். இதில், முதல் பரிசை ஜெஜெ கல்லூரி மாணவி சு. தாரணி, இரண்டாம் பரிசை மதர் தெரசா கல்லூரி மாணவர் து. லட்சுமணன், மூன்றாம் பரிசை அரசு மருத்துவக் கல்லூரி மாணவி எஸ். வீரலட்சுமி ஆகியோரும் பெற்றனர், இவர்களுக்கான பரிசுகள் புத்தகத் திருவிழாவின் போது வழங்கப்படும்.




கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மேயர் கல்பனா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி உடனடியாக தீர்வுகாண உத்தரவிட்டார். உடன் மாநகராட்சி கமிஷனர் பிரதாப் உள்ளார்.

# 13 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூலை.27-

தமிழகத்தில் 13 மாவட்டங்களில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் கடந்த சில நாள்களாகவே தொடர் மழை பெய்து வருகிறது. சென்னையில் கடந்த இரு நாள்களாகவே இரவிலிருந்து அவ்வபோது விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், தமிழகத்தில் இன்று 13 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நீலகிரி, கோவை, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது

# காஞ்சிபுரத்தில் அதிவேகமாக வந்த 31 வாகனங்களுக்கு போலீசார் அபராதம்

காஞ்சிபுரம், ஜூலை,27

தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை ஆணையர் சண்முகசுந்தரம் மற்றும் சென்னை தெற்கு சரக இணை ஆணையர் முத்து ஆகியோரின் உத்தரவின் படி, காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலர் தினகரன் தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர் பன்னீர்செல்வம் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் காஞ்சிபுரம் வெள்ளை கேட் அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக அதிவேகமாக வந்த 31 வாகனங்களை கண்டறியப்பட்டது. உடனடியாக அந்த வாகனங்களுக்கு ரூ.59 ஆயிரம் அபராதம் விதித்து இதுபோன்று மீண்டும் அதிவேகமாக வாகனங்களை இயக்க கூடாது என்று போலீசார் எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் கா.பன்னீர்செல்வம் கூறுகையில்:

அதிவேகமே சாலை விபத்தில் உயிரிழப்புக்கு முக்கிய காரணமாக உள்ளது, சாலைகளில் பக்கவாட்டில் வட்டமாக பொருத்தப்பட்டிருக்கும் போக்குவரத்து சின்னத்தில் குறிப்பிடப்பட்ட வேக அளவில்தான் அந்தந்த பகுதியில் செல்லவேண்டும் என்றும் விளக்கமளித்தார்.

மேலும் தணிக்கையின்போது பெரும்பாலான டிரைவர்கள் தாங்கள் சரியான வேகத்தில் தான் வந்தோம் என்று கூறி வாக்குவாதம் செய்தனர் பின்னர் ரேடாரின் வேக புகைப்படத்தை பார்த்த பின்னர்தான் தம் தவறை உணர்ந்து, இனி இவ்வாறு செய்யமாட்டோம் என்று உறுதி எடுத்து சென்றார்கள் என்றார்.

# செம்பனார் கோவிலில் கார்கில் போர் வெற்றி தினம் அனுசரிப்பு லயன் சங்கம் மற்றும் கல்லூரி மாணவிகள் பேரணி







தரங்கம்பாடி, ஜூலை- 27:

கடந்த 1999 ஆம் ஆண்டு பாகிஸ்தான் ராணுவத்தினர் ஜம்மு-காஷ்மீரின் கார்கில் பகுதியில் ஊடுருவி அப்பகுதியை ஆக்கிரமிப்பு செய்தனர். இதனால் கார்கில் மாவட்டம் திராஸ், கச்சார், படாலிக், துர்துக், ஆகிய பகுதிகளில் இந்திய ராணுவத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் மூண்டது. மிகப்பெரிய மலைத் தொடரில் போர் நடந்தது. சவால்கள் நிறைந்த போரில், பாகிஸ்தானுக்கு இந்தியா பலத்த அடி கொடுத்து கார்கில் போரில் வெற்றி வாகை சூடிய நாளான ஜூலை 26 ஆம் தேதி நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டு கொண்டாடப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார் கோவிலில் டெம்பிள் சிட்டி லைன்ஸ் சங்கம் மற்றும் கலைமகள் கல்லூரி நாட்டு நல பணி திட்டம் மாணவிகள் சார்பில் கார்கில் வெற்றி தினம் லயன் சங்க தலைவர் ராஜாராமன் தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் ராமராஜ், லயன் சங்க செயலாளர் வெங்கடாசலம், பொருளாளர் அந்தோணி, மாவட்ட தலைவர் அன்பழகன், மாவட்டத் தலைவர் அச்சயலிங்கம், மண்டல தலைவர் மதிவாணன், மண்டல ஒருங்கிணைப்பாளர் கவியரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேரணி கீழமூக்கட்டு பகுதியில் இருந்து டெம்பிள் சிட்டி லைன் சங்க பொறுப்பாளர்கள் லயன்.சதீஷ், லயன்,. அழிக்கிரிசாமி, மற்றும் கலைமகள் கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள், சேவை சங்கத்தினர், சமூக ஆர்வலர்கள் பேரணியாக மேலமுக்கூட்டு பேருந்து நிலையம் வந்தடைந்தனர். தொடர்ந்து கார்கில் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு செம்பனார்கோவில் காவல்துறை ஆய்வாளர் குணசேகரன் மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து செலுத்தி துவங்கி வைத்தார். தொடர்ந்து லைன் சங்கத்தினர் கல்லூரி மாணவ மாணவிகள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் மாணவிகள் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணிக்கு செம்பனார் கோவில் காவல் ஆய்வாளர் குணசேகரன் தலைமையிலான ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# ஆக்கூர் கடை வீதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பொது சிவில் சட்டத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்



தரங்கம்பாடி, ஜூலை- 27:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர் கடைவீதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பொது சிவில் சட்டத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செம்பை ஒன்றிய செயலாளர் மார்க்ஸ் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இந்திய மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் ஒன்றிய மோடி அரசின் பொது சிவில் சட்டத்தை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சீனிவாசன் மாவட்ட செயற்குழு ஸ்டாலின் மாவட்ட செயற்குழு துரைராஜ் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரை ஆற்றினர்.

இதில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சிம்சன், ரவிச்சந்திரன், மாரியப்பன், விஜயகாந்த், வெண்ணிலா, மாவட்ட குழு உறுப்பினர்கள் கலைசெல்வி, கண்ணகி, அம்மையப்பன், சரவணன், அமுல்காஸ்ட்ரோ, ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், அசோகன், கேசவன், விஜய் உள்ளிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் பலர் பங்கேற்று கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தனியார் முதியோர் இல்லத்துக்கு தொந்தரவு தருவோர் மீது நடவடிக்கை: போலீஸாருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு



சென்னை, ஜூலை.27-

சென்னை உயர் நீதிமன்றத்தில் அதுல்யா அசிஸ்டட் லிவிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் சார்பில் பிரெட்ரிக் அந்தோணி என்பவர் தாக்கல் செய்திருந்த மனுவில், ''எங்களது நிறுவனம் சார்பில் பல்லாவரத்தில் முதியோர் இல்லம் நடத்தி வருகிறோம்.

இதற்கு முறையான அனுமதி பெற்றுள்ளோம். எங்கள் இல்லத்தில் முதியவர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் என சுமார் 150 பேர் உள்ளனர். ஆனால் அப்பகுதியைச் சேர்ந்த அரசியல் செல்வாக்குமிக்க சிலர் அவ்வப்போது எங்களுக்கு தேவையற்ற இடையூறுகளையும், பிரச்சினைகளையும் செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக கடந்த ஜூலை 9-ம் தேதி பல்லாவரம் போலீஸில் புகார்செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே எங்களுக்கு இடையூறு செய்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும்'' என கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அபுடுகுமார் ஆஜராகி வாதிட்டார்.

அதையடுத்து நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் பிறப்பித்துள்ள உத்தரவில், "பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அனுமதி பெற்று நடத்தப்படும் முதியோர் இல்லங்களின் அன்றாட நடவடிக்கைகளில் தலையீடு செய்யவோ, மிரட்டல் விடுக்கவோ யாருக்கும் எந்த உரிமையும் இல்லை.

இந்த சட்டத்தின்படி முதியோரின் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாக்க வேண்டியது போலீஸாரின் கடமை. எனவே, சம்பந்தப்பட்ட முதியோர் இல் லத்துக்கு மிரட்டல் விடுத்து தொந்தரவு செய்யும் நபர்கள் மீது போலீஸார் உடனடியாக தகுந்த நட வடிக்கைஎடுக்கவேண்டும்" என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளார்.

## மணிப்பூர் கலவரத்தை கண்டித்து பொன்னமராவதியில் காங்கிரஸ் கட்சியினர் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்



பொன்னமராவதி, ஜூலை.27–

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதிபேருந்து நிலையம்எதிரில்மணிப்பூர் கிறிஸ்துவ பழங்குடி குக்கி, சமூகத்தைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்கள் மீது நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமையை கண்டித்தும், மணிப்பூரில் நடந்துவரும்வன்முறையை தடுக்க தவறிய ஆளும் பாஜக ஒன்றிய அரசை கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பினர்.

மேலும் மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர், ஆர்ப்பாட்டம்முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ஜீவானந்தம்தலைமையில் நடைபெற்றது, இதில் கலந்து கொண்ட நிர்வாகிகள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி பாஜக அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

இதனைத்தொடர்ந்து அவசரமாக வந்த ஆம்புலன்ஸ்நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு சிறிது நேரம் தாமதம் ஏற்பட்டது இதனால் பரபரப்பு உண்டானது, அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்நிகழ்வில் பொன்னமராவதி நகர காங்கிரஸ் தலைவர் பழனியப்பன், தெற்கு ஒன்றியத் தலைவர் மணிகண்டன், காங்கிரஸ் வட்டாரத் தலைவர்கள் கிரிதரன் , இளைஞரணி தலைவர் கணேஷ் சுப்புராம், உள்ளிட்ட நிர்வாகிகளும் மாவட்ட, ஒன்றிய, நகர காங்கிரஸ் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை ஜெ.ஜெ கல்லூரியில் உணவக மேலாண்மையியல் துறையில் கருத்துரை



புதுக்கோட்டை, ஜூலை.27–

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி தன்னாட்சி உணவக மேலாண்மையியல் துறையின் டியூக்ஸ் அண்ட் டச்சஸ்சங்கத்தின் சார்பில் நேற்று பேக்ஸ்ரூகேக்ஸ் என்றத்தலைப்பில்துறைப் பேக்கரி ஆய்வகத்தில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது, நிகழ்வில் துறையின் முன்னாள் மாணவரும் புதுக்கோட்டை மஹாராஜா பேக்கரியின் பேஸ்டரி செப் மணிகண்டன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினர்.

மேலும் சாக்லேட் பிரவுணி, சாக்லேட்மூஸ் மற்றும் மில்க் குக்கீஸ்போன்ற பேக்கரி உணவு பண்டங்களை மாணவர்களுக்கு செய்து காட்டி பயிற்சி வழங்கினார், அதைத் தொடர்ந்து பேக்கரியில் உணவு பொருட்கள் தயாரிக்கின்றபொழுது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை விளக்கி பேக்கரித் துறையில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதன் மூலம் அவர்கள் தொழில் முனைவோர்களாக உருவாவதற்கான வாய்ப்புகள் எராளமாக உள்ளன என்பதை எடுத்துக் கூறினார் முன்னதாக துறைத்தலைவர் கார்த்திகேயன் வரவேற்க துறைப் பேராசிரியர் நன்றி கூறினார்.

## தென்காசி மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் கூட்டமைப்பு கலந்தாய்வுக் கூட்டம்



தென்காசி, ஜூலை.27–

தென்காசி மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் கூட்டமைப்புகலந்தாய்வுக் கூட்டம் குத்துக்கல் வலசை தனியார் திருமண மஹாலில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் டி.கே பாண்டியன் தலைமை வகித்தார். ஒன்றிய கூட்டமைப்பு தலைவர்கள்ராஜ்குமார்,நீதி ராஜன், விசுவாசம், ராதா, பரசுராமன், வேலுச்சாமி, முத்தையா, சந்திரசேகர், அமுதா, ரமணி பாய், மற்றும் பூமிநாத், அய்யலு சாமி, அன்பு ராணி, பூமாரியப்பன், சையது இப்ராஹிம், குணசேகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தென்காசி ஒன்றிய கூட்டமைப்புத் தலைவர் சத்யராஜ் வரவேற்புரை ஆற்றினார், தென்காசி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வேலுச்சாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார், இக்கூட்டத்தில் தமிழ்நாடு பஞ்சாயத்து தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் முனியாண்டி மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஆரணிராஜன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதில் பஞ்சாயத்து ராஜ் திட்டத்தை முழுமையாக அமல்படுத்துதல் வேண்டும், பஞ்சாயத்து தலைவர்களுக்கு மதிப்பூதியம் வழங்க வேண்டும், உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இதில்நிறைவேற்றப்பட்டன. முடிவில் வீராணம் பஞ்சாயத்து தலைவர் வீரபாண்டியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## ஆதனக்கோட்டை அருகே சட்டவிரோதமாக மது விற்பனை செய்தவர் கைது

ஆதனக்கோட்டை, ஜூலை.26–

புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூர் மலையாண்டிகோவில் தெருவைச் சேர்ந்தவர் ஆறுமுகம் மகன் செந்தில் (37), இவர் அரசு மதுபான கடையில் மது பாட்டில்களை வாங்கி வந்து பெருங்காகுளத்துக்கரை அருகே கூடுதல் விலைக்கு சட்ட விரோதமாக மது விற்பனை செய்துள்ளார். சட்ட விரோதமாக மது விற்பனை செய்வதாக ஆதனக்கோட்டை காவல் துறையினருக்கு கிடைத்தரகசிய தகவலின் பேரில் அங்கு சென்ற காவல்துறையினர் செந்திலை மடக்கிப்பிடித்து 910 ரூபாய் மதிப்புள்ள மதுபாட்டில்களையும் 400 ரூபாய்ரொக்கத்தினையும் பறிமுதல் செய்த ஆதனக்கோட்டை சப் இன்ஸ்பெக்டர் அருணகிரி செந்தில் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.



▶ சென்னையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்துவது குறித்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று மாவட்ட ஆட்சியரகத்தில் கலந்தாய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தங்கவேல், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## குன்றாண்டார்கோவில் ஒன்றியக்குழு சார்பில் அரசியல் பயிற்சி வகுப்பு



புதுக்கோட்டை, ஜூலை.27–

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டைமாவட்டம் குன்றாண்டார்கோவில் ஒன்றியக்குழு சார்பில் அரசியல் பயிற்சி வகுப்பு குன்றாண்டார்கோவில் நால்ரோட்டில் நேற்று நடைபெற்றது.

பயிற்சி வகுப்புக்கு கட்சியின் ஒன்றியச் செயலாளர் எஸ். கலைச்செல்வன் தலைமை வகித்தார், 'சோசலிசமே மாற்று' என்ற தலைப்பில் மாநிலக்குழு உறுப்பினர் எம்.சின்னதுரை எம்எல்ஏ., 'நாம்கம்யூனிஸ்ட் என்பதில் பொருமைகொள்வோம்' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், 'கிளைக்கூட்டம் ஏன்? எப்ப?' என்ற தலைப்பில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.ஸ்ரீதர் ஆகியோர் உரையாற்றினர்.

மாவட்டக்குழு முடிவுகளை விளக்கி மாவட்டக்குழு உறுப்பினர் கே.தங்கவேல் பேசினார். ஒன்றியக்குழுஉறுப்பினரும், பேரூராட்சி மன்ற உறுப்பினருமான எம். மகாலெட்சுமி நன்றி கூறினார், பயிற்சிவகுப்பில் 200–க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## குழந்தை விற்பனை வழக்கு: செவிலியர் பணி நீக்க உத்தரவை ரத்து செய்தது உயர் நீதிமன்றம்



மதுரை, ஜூலை.27–

குழந்தை விற்பனை வழக்கில் தொடர்புடைய செவிலியரின் பணி நீக்க உத்தரவை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது.

விருதுநகர் மாவட்டம் மாரனேரியைச் சேர்ந்தவர் பஞ்சவர்ணம். இவருக்கு ஏற்கெனவே 3 குழந்தைகள் உள்ள நிலையில் 4வது முறையாக கர்ப்பமானார். அவருக்கு ஜன. 29-ல் பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை நெல்லையைச் சேர்ந்த குழந்தையில்லா தம்பதிக்கு விற்கப்பட்டது. இது தொடர்பாக பஞ்சவர்ணத்தின் தாயார் அளித்த புகாரின் பேரில் மாரனேரி போலீஸார் பாண்டீஸ்வரன், பஞ்சவர்ணம், ஜார்ஜ் தம்பதியர், செவிலியர்கள் முத்துமாரி மற்றும் அஜிதா உள்ளிட்ட பலர் மீது வழக்குப் பதிவு செய்தனர். அஜிதா பணி நீக்கம் செய்யப்பட்டார்.

பணி நீக்கத்தை ரத்து செய்து தன்னை மீண்டும் பணியில் சேர்க்கக்கோரி அஜிதா உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார். இதனை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் விசாரித்தார். மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் கே.பி.கிருஷ்ணதாஸ் வாதிடுகையில், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட செவிலியர் முத்துமாரி, வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளரின் சகோதரி. அவரை காப்பாற்றும் நோக்கத்தில் மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவு: ''குழந்தை விற்பனை விவகாரத்தில் மனுதாரருக்கு தொடர்பு உள்ளதா இல்லையா என்ற விவகாரத்துக்குச் செல்ல விரும்பவில்லை. அது நீதிமன்ற விசாரணையின் முடிவில்தான் தெரியவரும். அதேநேரத்தில் பணி நீக்கம் மனுதாரருக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தொகுப்பூதிய பணியாளரான மனுதாரருக்கு உரிய நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டும்.தன்னிச்சையாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

மனுதாரர் மீது வழக்கு உள்ளது என்பது சுகாதாரத்துறையை பாதகமாக்காது. இயற்கை நீதி மீறப்பட்டுள்ளதால் மனுதாரரின் பணி நீக்க நடவடிக்கை ரத்து செய்யப்படுகிறது. மனுதாரரை உடனடியாக பணியில் சேர்க்க வேண்டும். மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள் இயக்குநர் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கலாம்.'' இவ்வாறு நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

## தாம்பரம் – செங்கோட்டை விரைவு ரயில் சிவகங்கையில் நிற்காது மானாமதுரையிலும் ஏற முடியாது பயணிகள் ஏமாற்றம்



மானாமதுரை, ஜூலை.27–

தாம்பரம் - செங்கோட்டை விரைவு ரயில் சிவகங்கையில் நிற்காது. மானாமதுரையில் கிராஸிங்குக்காக மட்டுமே நின்று செல்லும். இதனால் பயணிகள் ஏற முடியாத நிலை உள்ளது.

தாம்பரம் - செங்கோட்டை விரைவு ரயில் சேவையை சில மாதங்களுக்கு முன்பு, பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த ரயில் வாரந்தோறும் ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் இரவு 9 மணிக்கு சென்னை தாம்பரத்தில் இருந்து புறப்பட்டு விழுப்புரம், மயிலாடுதுறை, திருவாரூர், காரைக்குடி, அருப்புக்கோட்டை, விருதுநகர், நெல்லை, தென்காசி வழியாக மறுநாள் காலை 10.50 மணிக்கு செங்கோட்டையை அடையும். அதேபோல் மறுமார்க்கமாக திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு, மறுநாள் காலை 6.05 மணிக்கு தாம்பரத்தை அடையும்.

இந்த ரயில், கிராசிங்குக்காக மானாமதுரையில் நின்று செல்கிறது. ஆனால் முக்கிய ஜங்ஷனான மானாமதுரையை நிறுத்தமாக அறிவிக்காததால் பயணிகள் ஏறவோ, இறங்கவோ முடியாது. அதேபோல் சிவகங்கையில் இந்த ரயில் நின்று செல்வதில்லை.

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியில் மட்டுமே நின்று செல்கிறது. காரைக்குடிக்கு முன்புள்ள புதுக்கோட்டையிலும் நின்று செல்லாததால் புதுக்கோட்டை, சிவகங்கை, மானாமதுரை மக்கள் சென்னை, செங்கோட்டை, தென்காசிக்கு சென்று வருவதற்கு ஏதுவாக தாம்பரம்- செங்கோட்டை ரயிலை இரண்டு இடங்களிலும் நின்று செல்ல கார்த்தி சிதம்பரம் எம்.பி. குரல் கொடுக்க வேண்டுமென கோரிக்கை எழுந்தது குறிப்பிடத்தக்கது.

# குறைந்த பந்துகளில் அதிக ரன்கள் அதிரடி கிங் விரேந்திர சேவாக் தான் டாப் !



இங்கிலாந்து, ஜூலை.27–

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் 2023 டெஸ்ட் தொடரில் ஓல்ட் ட்ராபர்ட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தின் தொடக்க வீரர் ஜாக் கிராலி 182 பந்துகளில் 189 ரன்கள் விளாசினார். தனிப்பட்ட அதிகபட்ச ஸ்கோரில் குறைந்த பந்துகளில் எடுத்தது இதுதானோ என்றும்பலரும்நினைக்கக் கூடும். ஆம்! ஆனால் இது ஆஷஸ் சாதனைதான்! ஆல் டைம் சாதனையில் இந்த வகையில் இந்திய அணியின் அதிரடி மன்னன் விரேந்திர சேவாக் தான் முதலிடம்.

சேவாக் மெல்போர்னில் 2003-04 தொடரில் பெரிதும் கொண்டாடப்படும் பாக்சிங் டெ டெஸ்ட் முதல் நாளில் ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சைப் புரட்டி எடுத்து 25 பவுண்டரிகள் 5 சிக்சர்களுடன் 233 பந்துகளில் 195 ரன்கள் எடுத்தார். ஒருவேளை இரட்டைச் சதம் எடுத்திருந்தால் இதுதான் அதிக பந்துகள் எடுத்துக் கொண்ட இரட்டைச் சதமாக இருந்திருக்கும். இதன் பிறகு சேவாக் எடுத்த மிகப்பெரிய தனிப்பட்ட ஸ்கோர்கள் எல்லாமே ஜாக்கிராலியை ஒப்பிடும் போது மிக மிகக் குறைந்த பந்துகளில் விளாசிய பெரிய சதங்களே.

ஆஷஸ் தொடரில் 2001-ம் ஆண்டு எட்ஜ்பாஸ்டன் டெஸ்ட்டில் ஆடம் கில்கிறிஸ்ட் இங்கிலாந்து பவுலிங்கை உரித்துத் தொங்க விட்ட இன்னிங்ஸில் 143 பந்துகளில் 152 ரன்கள் விளாசியதே ஆஷஸ் டெஸ்ட் தொடர் வரிசையில் குறைந்த பந்து அதிக ஸ்கோர் என்ற வரிசையில் இருந்து வந்தது. அதை இப்போது ஜாக் கிராலி முறியடித்துள்ளார். சமீபத்தில் ட்ராவிஸ் ஹெட் கூட 148 ரன்களைக் குறைந்த பந்தில் எடுத்து ஆஷஸ் சாதனையை வைத்திருந்தார்.

ஆனால் டெஸ்ட் போட்டிகளில் மேற்கூறியதை விடவும் அதிக ரன்களை குறைந்த பந்துகளை எடுத்த தருணங்கள் எட்டு என்கிறது புள்ளி விவரங்கள். இதில் இன்று வரை மிகப்பெரியது, இனியும் முறியடிக்க முடியாமலே கூட போகக்கூடிய சாதனை சென்னையில் 2007-08 தொடரில் விரேந்திர சேவாக் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக 319 பந்துகளை 304 பந்துகளில் எடுத்ததே முதலிடம் வகிக்கின்றது.

இந்தப் பட்டியலில் இரண்டாவதாக உள்ளதும் விரேந்திர சேவாகின் அதிகபட்ச ஸ்கோர்தான். 2009-10 தொடரில் இலங்கைக்கு எதிராக மும்பையில் 254 பந்துகளில் 293 ரன்களை விளாசியதை யாரேனும் மறக்க முடியுமா? முக்கியமாக முரளிதரன் மறக்க முடியுமா?

அடுத்த இடத்தில் கேப்டவுனில் 2015-16 தொடரில் பென் ஸ்டோக்ஸ் 198 பந்துகளில் 258 ரன்களை விளாசி தான் அந்த இங்கிலாந்து அணியைச் சேர்ந்த வீரர் அல்ல என்று தன் தனித்துவத்தை நிரூபித்த இன்னிங்ஸ் ஆகும். மீண்டும் அடுத்த பெரிய ஸ்கோர் குறைந்த பந்து பட்டியலில் லாகூரில் சேவாக் பாகிஸ்தானுக்கு எதிராக கிரெக் சாப்பல் கோச் ஆக இருந்த போது இந்திய அணிக்காக எடுத்த 247 பந்துகளில் 254 ரன்கள் உள்ளது. இவரும் திராவிடும் ஆடிக்கொண்டே இருந்தார்கள்.

ஆனால் இவர்களுக்கெல்லாம் முன்னோடி ஒருவர் இருக்கிறார். அன்றைய தினம் லைவ் ஆக அந்த இன்னிங்ஸைப் பார்த்து இன்னும் கூட மிரண்டு போய் கிடக்கும் இன்னிங்ஸ், குறிப்பாக இங்கிலாந்து மறக்க முடியாத இன்னிங்ஸ். ஆம்! நியூசிலாந்தின் நேதன் ஆஸ்ட்ல் 168 பந்துகளில் 222 ரன்களை விளாசி கிறைஸ்ட் சர்ச்சில் 450 ரன்களுக்கும் மேலான இலக்கை ஏறக்குறைய வெற்றிகரமாக விரட்டி விடுவார் என்று நாற்காலி நுனியில் விரல் நகங்கள் காணாமல் போக டென்ஷனுடன் பார்த்த அந்த இன்னிங்சை மறக்க முடியுமா? இங்கிலாந்து கதி கலங்கிப் போனதைத்தான் மறக்க முடியுமா?

நேதன் ஆஸ்ட்ல் ஆடிய ஆட்டத்தை இன்று ஒரு கிரிக்கெட் பாணியாகவே மாற்றிவிட்ட பிரெண்டன் மெக்கல்லமும் இந்த அதிரடி பட்டியலில் இருக்கிறார். 2014-ல் ஷார்ஜாவில் பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் ஒன்றில் பிரெண்டன் மெக்கல்லம் 188 பந்துகளில் 202 ரன்களை விளாசினார். இந்த இன்னிங்ஸிற்கு ஒருமாதம் சென்று கிறைஸ்ட்சர்ச்சில் இலங்கையை புரட்டி எடுத்த பிரெண்டென் மெக்கல்லம் 134 பந்துகளில் 135 ரன்களை விளாசித்தள்ளினார். இந்தப் பட்டியலில் ஷிகர் தவானையும் நாம் விட்டு விட முடியாது காலே மைதானத்தில் 2017-ல் இலங்கைக்கு எதிராக 168 பந்துகளில் தவான் 190 ரன்களை எடுத்ததும் இந்தப் பட்டியலில் ஜொலிக்கும் பலரத்தினங்களில் ஒன்று என்றே கூற வேண்டும்.

## புதுக்கோட்டையில் புத்தகத் திருவிழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி



புதுக்கோட்டை, ஜூலை.27–

ஆறாவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு புதுக்கோட்டையில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

6 - ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா வருகின்ற ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 6 வரை புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெறுகிறது. புத்தகத்திருவிழா குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் புதுக்கோட்டையில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

புதுக்கோட்டை நீதிமன்ற வளாகத்தின் முன்பாகத் தொடங்கிய இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் ஐ.சா. மெர்சி ரம்யா கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, கோட்டாட்சியர் எஸ். முருகேசன், ஆதிதிராவிட நல அலுவலர் கி.கருணாகரன், புதுக்கோட்டை வட்டாட்சியர் விஜயலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் முதன்மை கல்வி அலுவலர் சாமி. சத்தியமூர்த்தி, புத்தகத் திருவிழா மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தங்கம்மூர்த்தி, அ.மணவாளன், எஸ். டி.பாலகிருஷ்ணன், ம.வீரமுத்து, ஜீவி, மு.முத்துக்குமார், க.சதாசிவம், த.விமலா, ராசி.பன்னீர்செல்வம், ஈ.பவனம்மாள், மு.கீதா மற்றும் அறிவியல் இயக்க நிர்வாகிகள், வரவேறப்புக்குழு உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

மாணவர்கள் புத்தகங்களை கையில் ஏந்தியும், பாலூன்களைப் பறக்கவிட்டும், புத்தகங்களின் அவசியம் குறித்து முழுக்கங்களை எழுப்பியவாறும் நடைபெற்ற இப்பேரணி பழைய பேருந்து நிலையம், அண்ணா சிலை, வழியாக கீழ ராஜ வீதி, வடக்கு வீதிவழியாக நகர் மன்றத்தை வந்தடைந்தது. இதைப்போல பொன்னமராவதி, கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, மாத்தூர் உள்ளிட்ட இடங்களிலும் பேரணி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# பாஜக ஆட்சி தொடர்ந்தால் அரசியலமைப்பு சட்டத்தை காப்பாற்ற முடியாது

# சீர்காழியில் மின்விளக்கு எரியாததால் தீப்பந்தம் ஏற்றிய பொதுமக்கள்





# நியோ - மேக்ஸ் நிறுவன மோசடி மதுரையில் எல்ஐசி அதிகாரி கைது


| சென்னை / புதுக்கோட்டை | 27.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



தேசிக விநாயகம்பிள்ளை , தமிழகக் கவிஞர் (பி.1876) (இ.1954)



சோமசுந்தர பாரதியார் , தமிழகத் தமிழறிஞர் (பி.1879) (இ.1959)



உத்தவ் தாக்கரே , இந்திய அரசியல்வாதியும், சிவ சேனாவின் தலைவர் (பி.1960)

## இன்றைய நினைவு நாள்



சோமசுந்தரப் புலவர் , ஈழத்துப் புலவர் (பி.1878) (இ.1953)



சு. து. சு. யோகி , தமிழகத் தமிழறிஞர், திரைப்படப் பாடலாசிரியர், இயக்குநர் (பி.1904) (இ.1963)



பட்டம் தாணு பிள்ளை , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், \காந்தியவாதி (பி.1885) (இ.1970)



ஏ. பி. ஜெ. அப்துல் கலாம் , இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவர் (பி.1931) (இ.2015)